இணைப்பு 6.

மானியக் கோரிக்கை எண் 49—குடிநீர் வழங்கல்.

1991–92.

ரூ. 164.5252 கோடி.

தமிழ்நாடு குடிநீர் வழங்கல்—வடிகால் வாரியம்.

1. முன்னுரை:

தமிழகத்தின் அனைத்து மக்களுக்கும் போதிய, நிரந்தரமான அளவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணிக்கு தமிழக அரசு பெருமளவில் முன்னுரிமை அளித்து வருகிறது. குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் பணிகளை விரைவு படுத்தும் நோக்கோடு தமிழக அரசு ''தமிழ்நாடு குடிநீர் வழங்க—வடிகால் வாரியம்'' என்னும் அமைப்பை ஏற்படுத்தியது. இவ்வாரியம் 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாளன்று உருப்பெற்றது. சென்னைப் பெருநகர் தவிர்த்து தமிழகத்தின் அனைத்து பகுதிகட்கும் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் பணிகள் இவ்வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் பணிகளை செவ்வனே செய்து முடிக்கத் தேவையான தொழில்நுட்ப சிறப்புத் திறமை மற்றும் நிர்வாகத் திறமை ஆகியவற்றை இவ்வாரியம் பெற்றுள்ளது. நீராதாரங்களைக் கண்டறியும் பணியில் விஞ்ஞான மற்றும் நவீன முறைகள் கையாளப்படுகின்றன. இதற்கான பணி அலுவலர்கள் நில நீராதாரங்களைக் கண்டறியும் பணியில் சீரிய பயிற்சி பெற்றுள்ளனர்.

2. ஊரகக் குடிநீர் வழங்கு திட்டம்:

ஊரகப் பகுதிகளுக்கான குடிநீர் வழங்கு திட்டங்கள், மத்திய அரசின் ''விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கு திட்டம்'' மற்றும் மாநில அரசின் ''குறைந்தபட்ச தேவைத் திட்டம்'' ஆகியவற்றின் கீழ் முழு மானியமாக நிதி வழங்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. ஊரகக் குடிநீர் வழங்கு திட்டங்கள் ஆயுள் காப்பீட்டுக் கழகக் கடன் உதவியுடனும் செயல்படுத்தப்படுகிறது.

ஊரகக் குடிநீர் வழங்கு திட்டத்திற்கென பெரிய அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட போதிலும் முழு அளவு குடிநீர் வசதி அமைப்பது என்பது

[1991 செப்டம்பர் 18

எட்ட முடியாத எல்லைக்கல்லாகவே இருந்து வருகிறது. இதற்கு முக்கிய காரணம் பருவ மழை பொய்ப்பதும், நில நீர் அளவு தாழ்வதுமேயாகும்.

ஊரகக் குடியிருப்புகளில் நிலவும் குடிநீர் வழங்கு நிலையை அறிய குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஆய்வுகள் நடத்தப் படுகின்றன.

1990 ஆம் ஆண்டு மேற்கொண்ட ஆய்வுப் பணிகளின்படி, ஊரகக் குடியிருப்புகளில் 1-4-1990 அன்று நிலவிய நிலவரம் பின்வருமாறு:—

	குடியிருப்புகளின் எண்ணிக்கை.
முழுமையான குடிநீர் வசதி பெற்றவை ..	26,441
பகுதியாக குடிநீர் வசதி பெற்றவை	45,939
குடிநீர் வசதியற்றவை	3,400
மொத்தம் ..	75,780

1990 ஆம் ஆண்டு நடத்திய ஆய்வின் மூலம் ஊரகக் குடியிருப்புகளில், நீராதாரங்களில் உள்ள இரசாயன மற்றும் நுண்ணுயிர்கள் பற்றிய விவரங்களையும் அறியப்பட்டது.

1-4-1991 அன்று ஊரகக் குடியிருப்புகளில் நிலவிய நிலவரம் பின்வருமாறு:—

	குடியிருப்புகளின் எண்ணிக்கை.
முழுமையாக குடிநீர் வசதி பெற்றவை ..	30,553
பகுதியாக குடிநீர் வசதி பெற்றவை	42,744
குடிநீர் வசதியற்றவை	2,483
மொத்தம் ..	75,780

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1991 செப்டம்பர் 18]

1991–92 நிதியாண்டில் இதுவரை குடிநீர் வசதி பெறாத நிலையிலுள்ள 2,483 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அமைத்துத்தர திட்டமிடப்பட்டுள்ளது. இவையன்றி, பகுதியாகக் குடிநீர் வசதி பெற்ற 3,366 ஊரகக் குடியிருப்புகளிலும் குடிநீர் வசதி அமைத்துத்தர திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பதவியேற்றவுடன் உடனடியாக, தமிழகத்தில் நிலவும் குடிநீர் வழங்கு நிலை பற்றிய ஓர் ஆய்வினை நடத்தினார்கள். இவ்வாய்விற்குப்பின், தமிழகத்திலுள்ள இதுவரை குடிநீர் வசதி பெறாத நிலையிலுள்ள அனைத்து ஊரகக் குடியிருப்புகளிலும் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிவிற்குள் குறைந்தபட்சம் ஒரு நீராதாரமாவது அமைக்கும் பணி நிறைவேற்றப்படவேண்டும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்கள். இதைத் தவிர, பகுதியாக குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகளின் பகுதியாக இருந்தபோதிலும், இதுவரை குடிநீர் வசதி பெறாத நிலையிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் அனைத்து குடியிருப்புகளுக்கும் நடப்பு ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதிக்குள் குடிநீர் வசதி அமைத்துத்தரவேண்டும் எனவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

மறு ஆய்வு, கிட்டத்தட்ட 10,000 குடியிருப்புகளில், கோடை மாதங்களில் நீராதாரங்கள் வற்றிப் போகும் நிலையை வெளிப்படுத்தியது. இதுவரை குடிநீர் வசதி பெறாத நிலையிலுள்ள குடியிருப்புகளில் பணிகள் நிறைவேற்றப்பட்ட பின், நீராதாரம், வற்றிப் போகும் இக் குடியிருப்புகளில் நிரந்தரமான நீராதாரம் உருவாக்கும் பணிக்கு உயர் முன்னுரிமை வழங்கப்படும். இதற்காக, முக்கியமாக, இக்கிராமப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க 5 ஆண்டுக் கால அளவில் செயல்படுத்தக்கூடிய வகையில் ரூபாய் 400 கோடி செலவில் புதிய திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் உலக வங்கி நிதியுதவியுடன் எடுத்துக் கொள்ளப்படும். நடப்பு நிதியாண்டில், முதற்கண் இத்தகைய நிலையிலுள்ள 500 குடியிருப்புகளில் பணியேற்கப்படும். வரும் ஆண்டுகளில் இப்பணிகள் விரைவுபடுத்தப்படும்.

ஊரகக் குடியிருப்புகளில் ஏற்கும் பணிகளுடன், நடப்பு நிதியாண்டில், 47 ஊரகப் பேரூராட்சிகளில் குடிநீர் வழங்கு திட்டங்கள் முழு மான்ய நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும்.

ஊரகப் பேரூராட்சிகள் நீங்கலாக, ஊரகப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கு திட்டங்களுக்கென 1991–92 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 6,309 இலட்சம் ஆகும். இதில் ரூ. 3,370 இலட்சம் மத்திய அரசின் ''விரைவுபடுத்தப்பட்ட குடிநீர் வழங்கு திட்டத்தின் கீழ் பெறக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது

மத்திய அரசின் "தொழில் நுட்ப செயல் முறைத் திட்டத்தின்" கீழ் தமிழகத்தைச் சார்ந்த இராமநாதபுரம், தென்னாற்காடு மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்கள் சிறு செயல் முறை திட்ட மாவட்டங்களாகத் தேர்வு செய்யப்பட்டன. இம் மாவட்டங்களில் இத்திட்டத்தின் கீழ் ஈட்டிய பணி மற்றும் நிதி அளவு முன்னேற்றம் பின்வருமாறு.—

பணி முன்னேற்றம்.

வரிசை எண்.	சிறு செயல் முறைத்திட்ட மாவட்டங்களின் பெயர்கள்.	நீராதாரம் உருவாக்கும் பணி.		திட்டம் நிறைவேற்றும் பணி.	
		இலக்கு	சாதனை.	இலக்கு.	சாதனை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	இராமநாதபுரம் ..	496	496	186	125
2	தென்னாற்காடு ..	451	451	100	64
3	சேலம் ..	729	649	121	18

நிதி அளவு முன்னேற்றம் :

வரிசை எண்.	சிறு செயல் முறைத் திட்ட மாவட்டங்களின் பெயர்கள்.	மத்திய அரசு ஒப்புதல் வழங்கிய தொகை.	மத்திய அரசு வழங்கிய தொகை.	இதுவரை செலவிடப் பட்ட தொகை	மத்திய அரசிடமிருந்து பெற வேண்டிய தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
		(ரூபாய் இலட்சங்களில்.)			
1	இராமநாதபுரம் ..	419.259	403.857	320.710	15.400
2	தெனனாற்காடு ..	230.850	210.000	173.440	20.850
3	சேலம்	460.060*	262.500	241.930	37.560

*மொத்த ஒப்புதலில் ரூ. 160 இலட்சம் "விரைவுபடுத்தப்பட்ட குடிநீர் வழங்கு திட்டத்தின்" கீழ் ஏற்கப்பட வேண்டும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1991 செப்டம்பர் 18]

வறட்சி நிவாரணப் பணிகள்:

இந்த அரசு வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வசதி அமைத்துத் தருவதெற்கென ரூ. 2.50 கோடி செலவில் 400 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இது தொடர்பான பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

3. நகரகக் குடிநீர்த் திட்டங்கள்:

தமிழகம், பெருமளவு நகர்ப்புறமாக உள்ள ஒரு மாநிலமாகும். நகரகப் பகுதிகட்கு குடிநீர் வழங்கும் பணிகளுக்கு தமிழக அரசு உயர் முன்னுரிமை வழங்கியுள்ளது. 1-4-1991 அன்று நகர்ப்பகுதிகளில் நிலவிய குடிநீர் வழங்கும் விவரம் பின்வருமாறு:—

வரிசை எண்.	பிரிவு.	மொத்தம்.	1-4-1991 அன்று நிலவரப்படி குடிநீர் வசதி பெறவேண்டியவை.
(1)	(2)	(3)	(4)
1	மாநகராட்சிகள் ..	2	..
2	நகராட்சிகள் ..	99	94*
3	நகராட்சி நகரியங்கள் ..	7	2
4	ஊராட்சி நகரியங்கள் ..	16	7
5	பேரூராட்சிகள் ..	632	326**
	மொத்தம் ..	756	339

* 4 நகராட்சிகளிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

** 45 பேரூராட்சிகளில் பணிகள் நடைபெறுகின்றன; இவற்றில் 11 பேரூராட்சிகளில் அபிவிருத்தி திட்டங்களும்; 34 பேரூராட்சிகளில் புதுத் திட்டங்களும் அடங்கும்.

[1991 செப்டம்பர் 18

1991–92 ஆம் ஆண்டு, பணி முன்னேற்றத்திலுள்ள 5 நகரங்களுக்கான திட்டங்களும் (அபிவிருத்தித் திட்டங்கள்), 15 பேரூராட்சிகளுக்கான திட்டங்களும் (5 அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் 10 புதியத் திட்டங்கள்), ரூ. 16.22 கோடி செலவில் முடிக்கப்படவுள்ளன.

4. நகரக வடிகால் திட்டங்கள்:

2 மாநகராட்சிகள், 12 நகராட்சிகள், 1 நகரப் பேரூராட்சி மற்றும் 1 ஊரகப் பேரூராட்சி ஆக மொத்தம் 16 நகரங்களில் வடிகால் திட்டங்கள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ செயல்பட்டு வருகின்றன. சேலம், கோவை, லப்பைக்குடிகாடு மற்றும் பழனி ஆகிய 4 நகரங்களில் வடிகால் திட்டங்கள் செயலாக்கத்திலுள்ளன. இவைகளுடன், உதகை நகராட்சிக்கான வடிகால் திட்டம் ரூ. 570 இலட்சம் செலவில் மலைப்பகுதி நலத் திட்டத்தின் கீழ் ஏற்கப்படும்.

5. உலக வங்கித் திட்டம்:

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உலக வங்கி உதவியுடன் ஒரு குடிநீர் வழங்கு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. முதலில், ரூ. 150 கோடிக்கு திட்டமிடப்பட்ட இத்திட்டத்தின் கீழ், கோவை, மதுரை மற்றும் சேலம் ஆகிய 3 பெருநகரங்களுக்கு குடிநீர் அபிவிருத்தி திட்டங்கள், 75 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான புதிய குடிநீர்த் திட்டம், 740 வழியோர ஊரகங்களுக்கு மொத்த குடிநீர் வழங்கு பணி மற்றும் 14 நகரங்களுக்கான "குறைந்த அளவு செலவில் கழிப்பறை அமைக்கும் பணிகள்" ஆகியவை கொண்டு வரப்பட்டன.

இத்திட்டத்திற்கென உலக வங்கி அளிக்கும் மொத்தக் கடனுதவி 70.60 மில்லியன் சிறப்பு நிதி உரிமையாகும். (Special Drawing Rights) சிறப்பு நிதி உரிமையின் மதிப்பு உயர்வின் காரணமாக, உலக வங்கி கடனுதவியில் சேமிப்பு இருந்தது. இக்கடனுதவியை முழுமையாகப் பெறும் நோக்கோடு, இத்திட்டம், ரூ. 299.83 கோடிக்கு திருத்தியமைக்கப்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின் கீழ் கூடுதலாக 6 நகரங்களுக்கான புதிய குடிநீர் வழங்கு திட்டங்கள் 2 ஊரகக் குடிநீர் வழங்கு திட்டங்கள் மற்றும் புதிய சாதனங்கள் வாங்குவது ஆகியவை கொண்டு வரப்பட்டுள்ளன. 1990 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் உலக வங்கிக் குழு திருத்தியமைக் பட்ட திட்ட மதிப்பீட்டை ரூ. 321.86 கோடிக்கு மாற்றியமைத்துள்ளது. இதில் ரூ. 4 கோடி செலவில், குறைந்த செலவிலான கழிப்பறை வசதிகள், கூடுதலாக அமைக்கும் பணி அடங்கும்.

31–3–1991 முடிய, உலக வங்கித் திட்டத்தின் கீழ், 28 நகரங்களுக்கு குடிநீர் வழங்கு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. முதலில் திட்டமிடப்பட்ட 14 நகரங்களிலும் குறைந்த செலவிலான கழிப்பறை வசதிகள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுவிட்டது. தொடக்கம் முதல் 31–3–1991 வரை இத்திட்டத்திற்கு ரூ. 98.57 கோடி செலவிடப்பட்டுள்ளது.

1991 செப்டம்பர் 18]

1991-92 ஆம் ஆண்டு மேலும் 16 நகரங்களில் குடிநீர் வழங்கு திட்டங்கள் நிறைவேற்றப்படும். இஃதன்றி, 1991-92 ஆம் ஆண்டில், கீழ்க்காணும் பணிகள் செயல்படுத்தப்படும்.

(1) 3 பெருநகரங்களில் உள்ள மிகுதிப் பணிகள்.;

(2) 31 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான திட்டப் பணிகள்;

(3) திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட 6 நகரங்களுக்கான திட்டப் பணிகள்;

(4) திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட 2 ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்கான பணிகள்;

(5) 12 நகரங்களில் குறைந்த செலவு கழிப்பறைப் பணிகள்.

திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின் கீழ் முக்கிய அம்சம் என்னவென்றால், நீராதாரம் காண்பதில் கடுமையான பகுதியாக கருதப்படும் காஞ்சீபுரம், பொள்ளாச்சி, புதுக்கோட்டை, மணப்பாறை, சங்கரன்கோவில் மற்றும் திருவண்ணாமலை ஆகிய நகரங்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இத்திட்டத்தை 1993 ஜூன் திங்கள் இறுதிக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

6. ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெற்ற உதவி:

ஆயுள் காப்பீட்டுக் கழகம் நகர்ப் பகுதிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு கடனுதவி வழங்கி வந்தது. சமீப காலமாக ஊரகப் பகுதிகளுக்கான குடிநீர்த் திட்டங்களுக்கும், ஆயுள் காப்பீட்டுக் கழகம் கடனுதவி வழங்குகிறது. 1969-70 முதல் 1990-91 வரை, குடிநீர் வழங்கு திட்டங்களுக்கென ஆயுள் காப்பீட்டுக் கழகம் ரூ. 200.10 கோடி கடனுதவி செய்துள்ளது. 1991-92 ஆம் ஆண்டு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து குடிநீர் வழங்கு திட்டங்களுக்கென ரூ. 29.18 கோடி கடன் பெற முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல்—கழிவு நீரகற்று வாரியம், சென்னை மாநகர்:

7. சென்னை மாநகரில், குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றல் ஆகிய பணிகள் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரின் பரப்பு 175.03 சதுர கிலோ மீட்டராகும். 1991 ஆம்

[1991 செப்டம்பர் 18

ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி சென்னை மாநகரின் தோராயமான மக்கள் தொகை 37.95 இலட்ச மாகும்.

8. சென்னைக் குடிநீர் வாரியம் தற்சமயம் இரண்டு பெரிய திட்டங்களைச் செயல்படுத்துவதில் கவனம் செலுத்தி வருகிறது. (அ) உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம், (ஆ) கிருஷ்ணா குடிநீர் திட்டத்தின் கீழ் சென்னைக்கு குடிநீர் கொணர்ந்து விநியோகிக்கும் திட்டம்.

9. உலக வங்கித் திட்டம் ரூ. 150.803 கோடி மதிப்பீட்டில் 1986–87 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 1990–91 வரையிலான செலவினம் ரூ. 60.81 கோடிகளாகும். சாதாரண பருவ மழைக் காலங்களில் நாளொன்றுக்கு வழங்கப்படும் 293 மில்லியன் லிட்டர் நீரை 1993–94-ல் நாளொன்றுக்கு 395 மில்லியன் லிட்டராக உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்க மாகும். புதிய நிலத்தடி நீர்ப் புலங்களை அமைத்தல், சென்னை நகர குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீரகற்று அமைப்பினை மேம்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும். 1991 ஆம் ஆண்டில் உலக வங்கித் திட்டத்தின்கீழ் திட்டமிடப்பட்ட ரூபாய் 32.00 கோடி ஒதுக்கீட்டுடன் மிக அதிகமான பணிகள் செயல்படுத்தப்படும். 1991–92 ஆம் ஆண்டில் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள முக்கிய பணிகளாவன.—

(அ) கொடுதலையாற்றில் இரண்டு தடுப்பணைகள் கட்டுதல்.

(ஆ) ஆரணியாற்றிலிருந்து கொடுதலையாற்றிற்கு நீரை திருப்பி விடுவதற்கான பணிகள்.

(இ) கலைஞர் கருணாநிதி நகர், விருகம்பாக்கம் மற்றும் சாலிகிராமம் முதலிய பகுதிகளின் குடிநீர் விநியோக அமைப்பினை அபிவிருத்தி செய்தல்.

(ஈ) ஐந்து முக்கிய கழிவு நீரேற்று நிலையங்களை மேம் படுத்துதல் மற்றும் தனியார் தெருக்களிலும், பொது தெருக் களிலும், தாழ்வான பகுதிகளிலும் கழிவு நீரகற்று குழாய்கள் அமைக்கும் பணிகள், செங்குன்றத்தில் நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் திறனுள்ள நீர்ச் சுத்திகரிக்கும் நிலையம் கட்டும் பணி நடைபெற இருக்கும் மற்றொரு முக்கிய பணி யாகும். சாதகமான பருவ மழையின் காரணமாக, நவம்பர் 1990-லிருந்து, சென்னை நகருக்கு நாளொன்றுக்கு 277 மில்லியன்

லிட்டர் நீர் தொடர்ந்து வழங்கப்படுவதுடன் தொழிற் கூடங்களுக்கு நாளொன்றுக்கு 55 மில்லியன் லிட்டர் நீரும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

சென்னைக்கு நீர் கொணர்ந்து விநியோகிக்கும் திட்டம் 1990–91 ஆம் ஆண்டிலேயே துவங்கப்பட்டாலும், பல முக்கிய பணிகள் 1991–92-ல்தான் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய பணிகளாவன.—

(அ) செங்குன்றத்தில் சுத்திகரிக்கப்படாத நீரினைக் கொணர்ந்து மற்றும் அதற்கான பம்பு செட்டுகள்/விசைக் குழாய்கள் அமைத்தல்.

(ஆ) செங்குன்றத்திலிருந்து போரூருக்கு நீர் கொணரும் பிரதான குழாய்கள் அமைத்தல்.

(இ) போரூரிலிருந்து கலைஞர் கருணாநிதி நகர், வள்ளுவர் கோட்டம் போன்ற இடங்களில் ஏற்கெனவே உள்ள நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு, நீர்க் கொணரும் குழாய்கள் அமைத்தல். 1991–92-ல் மேற்கண்ட திட்டங்களின் பணிகள் கணிசமான முன்னேற்றத்திலிருக்கும்.

10. 1991–92 ஆம் வருடத்திற்கான உத்தேசிக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு ரூபாய் 32.83 கோடிகளாகும். சென்னைக்கு நீர் கொணர்ந்து விநியோகிக்கும் திட்டத்தினை குறித்த காலத்திற்குள் முடிப்பதற்கு ஏதுவாக, அதிகப்படியான நிதி ஆதாரங்களைத் திரட்டும் வகையில், தமிழக அரசின் உத்தரவாதத்துடன் ஹட்கோ நிறுவனத்திடமிருந்து கூடுதல் கடனுதவியாக ரூ. 26.00 கோடிகளைப் பெறுவதற்கு இவ்வாரியத்திற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மொத்த ஒதுக்கீடு ரூ. 58.83 கோடிகளாகும். சென்னை நகருக்கு குடிநீர் கொணர்ந்து விநியோகிக்கும் திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்படும் கூடுதலான செயல் முன்னேற்றம், தற்பொழுது நடைபெற்று வரும் உலக வங்கித் திட்டப் பணிகளையும் கருத்தில் கொண்டு இந்த வாரியம் 1991–92 ஆம் ஆண்டின் இலக்கினை ரூ. 73.83 கோடியாக வைத்துக் கொள்ள உத்தேசித்துள்ளது. இது மாநில திட்டக் குழுவால் குடிநீர் வாரியத்திற்கு 1991–92 ஆம் ஆண்டிற்கான நிர்ணயித்த இலக்கிற்கு பொதுவாக ஒத்துள்ளது.